# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1983 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க,

# முஸ்லிம் பெண்களின் சமூக லீக் (இலங்கை) (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*[1983, செத்தெம்பர் மாதம் 07 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

**அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.**

---

*1983, செத்தெம்பர் மாதம் 09 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45 தபாற் செலவு : சதம் 50

1983 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, முஸ்லிம் பெண்களின் சமூக லீக் (இலங்கை) (கூட்டிணைத்தல்) சட்டம்

[1983, செத்தெம்பர் மாதம் 07 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ—ஓ. 37/82

1541

முஸ்லிம் பெண்களின் சமூக லீக்கை (இலங்கை) கூட்டிணைப்பதற்கானதொரு

சட்டம்

"முஸ்லிம் பெண்களின் சமூக லீக்" என அழைக்கப்படுவதும் அறியப் படுவதுமான கழகமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள் ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட கழகத்தோடு சம்பந்தப் பட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றுவதற்கும் கொண்டு நடாத்துவதற்குமென இலங்கையில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ள தாதலாலும் : முன்னுரை.

அத்துடன், சொல்லப்பட்ட கழகமானது எந்தப் பல்வேறு குறிக்கோள் களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறை வேற்றி, கொண்டுநடாத்தியுள்ளதாதலாலும், கூட்டிணைக்கப்பட விண்ணப் பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1983 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, முஸ்லிம் பெண் களின் சமூக லீக் (இலங்கை) (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும், (இத னகத்துப்பின்னர் "சமூக லீக்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முஸ் லிம் பெண்களின் சமூக லீக்கில் (இலங்கை) தற்போது உறுப்பினராக வுள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பின ராக இதன்மேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "முஸ்லிம் பெண்களின் சமூக லீக் (இலங்கை)" என்னும் பெயர் மகுடத்தின் கீழ் இடையறுவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப் பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும்; அத்துடன் அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதோடு அதற்கு எதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம். அத்துடன், பொது இலச்சினை ஒன்றை அது வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பி யாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும். முஸ்லிம் பெண்களின் சமூக லீக் (இலங்கை) கூட்டிணைத்தல்.

3. கூட்டுத்தாபனம் இத்தால் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத் தப்படுகின்றது :— கூட்டுத் தாபனத்தின் பொதுக் குறிக் கோள்கள்.

(அ) சருவதேச நல்லெண்ணத்தையும் மனித சமுதாயத்தின் சகோ தரத்துவத்தையும் ஊக்குவித்து, மேம்படுத்தி வளர்த்தல் ;

எ 84380–2900 /83/07/

(ஆ) உடல்நலம், கல்வி, பண்பாடு, சமூகத் தேவைகள், பொருளாதார நன்நிலை ஆகிய துறைகளில் சாதி, மத, நிற பேதமின்றி பெண்களினதும் சிறுவர்களினதும் முன்னேற்றத்துக்காகவும், உயர் நிலைக்காகவும், சேமநலத்துக்காகவும் முன்னின்று வேலைசெய்தல் ;

(இ) சகல மக்களினதும் பயன்பாட்டுக்காகவும் நன்மைக்காகவும் பாடசாலைகள் வகுப்புக்கள், களரி மனைகள், மண்டபங்கள் வாசிப்பறைகள், மருத்துவச்சாலைகள், ஆசுபத்திரிகள், அநாதை இல்லங்கள், சிறுவர் மனைகள், முதியோர் மனைகள் ஆகியவற்றையும் அத்துடன் வேறு வளவுகளையும் வசதிகளையும் தாபித்துப்பேணி நடாத்துதல் ;

(ஈ) வயோதிபர்களுக்கும் வறியவர்களுக்கும், நோய்வாய்ப்பட்ட ஆட்களுக்கும் உதவி அல்லது நிவாரணம் அளித்தல் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்காக கூட்டங்களை, கருத்தரங்குகளை, விரிவுரைகளை, அறிவுறுத்தல் வகுப்புகளை அல்லது வேறெவையேனும் நிகழ்ச்சிகளை மேம்படுத்தி நடாத்துதல் ;

(ஊ) இதையொத்த நிறுவனங்களுடன் பரஸ்பர உறவுகளை மேம்படுத்துதல் ;

(எ) மேலேயுள்ள குறிக்கோள்களை எய்துவதற்கு இடைநேர்விளைவானவையான அல்லது உகந்தவையான அல்லது இலங்கையில் அல்லது வேறெங்காவது உள்ள சமூகத்தின் அக்கறைகளையும் நலன்களையும் மேம்படுத்தவும், பாதுகாக்கவும் முன்னெடுத்துச் செல்லவும், முன்னேற்றவும் வேண்டியவையான அத்தகைய எல்லாச் செயல்களையும், காரியங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

4. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும் ; இத்தத்துவங்களுள், வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், நடாத்தவும், முடிவுறுத்தவும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களைக் கடனெடுக்கவும் அல்லது திரட்டவும், அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆளணியினரை வேலையிலிடுபடுத்தல், ஊழியத்திலமர்த்தல், வேலைநீக்கஞ் செய்தல் ஆகியவற்றுக்குமான தத்துவங்களும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், பதவிதாங்குநர்களையும் அப்போதைக்கு வலுவுள்ளனவாயிருக்கும் கூட்டுத்தாபனத்தின் விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டு அவ்விதிகளுக்கு இணங்கத் தெரிவுசெய்யப்படக் கூடிய அத்தகைய எண்ணிக்கையினரான வேறு ஆட்களையும் கொண்ட நிறைவேற்றுக் குழுவொன்றினால், அப்போதைக்கு வலுவுள்ளனவாயிருக்கும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய, நிருவகிக்கப்படல் வேண்டும்.

(2) இந்தச் சட்டம் நடைமுறைக்குவரும் நேரத்தில் பதவிவகிக்கும் சமூக லீக்கின் நிறைவேற்றுக்குழுவே கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்றுக் குழுவாக அமைதல் வேண்டும்.

6. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்வதற்காகவும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்காகவும், இச்சட்டத்தின் நெறிகளுக் கேற்பவும் ஏற்பாடுகளுக்கும் ஒவ்வாததையாகவிராத அத்தகைய விதிகளை, உறுப்பினர்களின் பொதுக்கூட்டம் எதிலும் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டுக்குக் குறையாத எண்ணிக்கையின ரின் வாக்குகளைக் கொண்டு காலத்திற்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாப னத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக் கப்பட்டவிடத்து, அதேபோன்ற கூட்டத்திலும் அதே முறையிலும் மாற் றப்படலாம் அவற்றிற்கு எதுவும் சேர்க்கப்படலாம், திருத்தப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

(2) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள், கூட்டுத்தாபனத்தின் விதி களுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

7. இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, இந்தச் சட்டம் நடை முறைக்கு வரும் நேரத்தில் உள்ள சமூக லீக்கின் எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும், கூட்டுத்தாபனத்தால் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன், சமூக லீக்கிற்கு வருமதியான எல்லாத் தனிசு களும், சமூக லீக்கிற்குச் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும் உதவுதொகைகளும், கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படலும் வேண் டும்.

*சமூக லீக்கினால் செலுத்தப் படற்பாலன வான அல்லது சமூக லீக்கிற் குச் செலுத்தப் படற்பாலன வான தனிசுகள்.*

8. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதி விருப்பாவணைக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய அசை வுள்ள, அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும் வைத்தி ருக்கவும் சட்டமுறை ஆற்றலும் தத்துவமும் உடையதாதல் வேண்டுமென் பதுடன், அத்தகைய எல்லா ஆதனங்களும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகை கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாள வுள்ள முழுத் தத்துவத்துடன், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், சொல்லப்பட்ட கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கான விதிகளுக்கமைய வும், கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.*

9. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கூட்டுத்தாபன விதிகளில் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்களின் முன்னிலையில் அன்றி, எத்தகையதுமான எந்தச் சாதனத் திலும் இடப்படலாகாது. அத்தகைய உறுப்பினர்கள், அவர்கள் சமூக மளித்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழு திக் கையொப்பமிடல் வேண்டும்; அத்துடன் அத்தகைய கையொப்பமிடு தல், சாட்சியாக எவரேனும் ஆள் கையொப்பமிடுவதற்குத் தனிவேறான தாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்வாறு இடப்பட வேண்டும் என்பது.*

குடியரசினதும் ஏனையோர்களதும் உரிமைகளைப் பேணுதல்.

10. இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், குடியரசினது உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின் கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*